# அண்டனூர் சுராவின் சிறுகதையில் அறிவியல் செய்திகள்

18

முனைவர் ந. கிருஷ்ணவேணி & க. செங்கொடி
தமிழ்த்துறை, அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),
கும்பகோணம் – 612 002, தமிழ்நாடு, இந்தியா
dr.k.sengodi@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் நியூட்டனின் இன்னொரு வகுப்பறை, பூங்கோதைக்கும் கற்பு உண்டு, தொடர்பு எல்லைக்கு உள்ளே, சிவப்பு மாத்திரை, மில்லி கிராம் மாத்திரை, வியப்புக் குறியீடு என்னும் சிறுகதைகளில் அறிவியல் வளர்ச்சி பெற்றுள்ள செய்திகளை கூறியுள்ளார். ஆகையால், காலங்காலமாக அறிவியல் சிறுகதைகளில் வளர்ந்து வருவதை இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

கியூர் – கஷ்டம் – டார்ச் லைட் – போலிஸ் – டாக்டர் – பிசினஸ் – செஃப்டிக் டேங்க் – சென்ரல் மினிஸ்டர் – டிஸ்கவுண்ட்

**முன்னுரை**

மனித சமுதாய வரலாற்றின் ஒரு பகுதியாக அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி அமையும். தமிழ்ச் சமுதாய வரலாறும் இதற்கு விதிவிலக்கன்று. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் இடம் பெற்ற அறிவியல் உணர்வு, தொழில்நுட்பத் திறன் பற்றி அறிய பண்டைய இலக்கிய இலக்கணங்களும் அவற்றின் உரைகளும் உதவுகின்றன. தமிழ் மொழியில் இடம் பெறும் அறிவியல் கல்வி, ஆய்வுகள், தகவல் பரிமாற்றம், பிற அறிவியல் புலமைசார் செயல்பாடுகளை அறிவியல் தமிழ் முதன்மையாக் குறிக்கின்றது. ஆகவே, காலங்காலமாக பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள், நாவல்கள், சிறுகதைகள் ஆகியவற்றில் அறிவியல் சார்ந்த நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

**பழந்தமிழ் நூல்களில் அறிவியல்**

தொல்காப்பியமும், இலக்கியமும் பண்டைத் தமிழரின் அறிவியல் தொழில்நுட்பச் சிந்தனைகள் செயல்பாடுகள் குறித்த பல குறிப்புகளை பதிவு செய்துள்ளனர். சிந்துவெளியில் சிறப்பாக தொழில்நுட்பம் செயல்பட்டதற்கு பல சான்றுகள் அகழாய்வில் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகம் என்பது வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் அதன் கூறான தமிழர் நாகரிகமும் தொன்று தொட்டு வளர்ந்து வருவதைக் காணலாம். அகநானூற்றில் பலியிடம் ஒன்று இட்டிகை கொண்டு கட்டப்பட்டதை, “இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தன”[1] என்னும் பாடல் வழியாக பண்டைய காலத்தில் அறிவியல் தொழில் நுட்பத்தை காணலாம். “கொடுமணம் பட்ட வினை மான் அருங்கலம் பந்தர் பயந்த பலர் புகழ் முத்தம்”[2] என்ற பாடலின் வாயிலாக தமிழரின் அணிகலங்களும், தொழில்நுட்பத்தையும் பதிற்றுப்பத்தின் வாயிலாக அறிய முடிகின்றது.

பண்டைய இலக்கிய இலக்கணங்களைத் தொடர்ந்து இயற்றப்பட்ட பல நூல்களும் தம்ழர்தம் அறிவியல் தொழில்நுடப் ஈடுபாடு குறித்து குறிக்கத்தவறவில்லை. தற்காலத்தில் இயற்றப்படும் நாவல்,

சிறுகதை, கவிதை போன்ற நவீன இலக்கியங்களிலும் அறிவியல் தொழில்நுட்பத்தினை கூறுகின்றது.

**சிறுகதைகளில் அறிவியல்**

நடந்த நிகழ்வுகளை மையமாகக் கொண்டோ, அவற்றை ஒட்டியோ கற்பனை கலந்து புனைய பெறுவன புனைக் கதைகள் ஆகும். அறிவியல் அம்சங்களை சாரமாகக் கொண்டு கற்பனையுடன் கலந்து ஆக்கப்படும் படைப்புகளை அறிவியல் புனைவு அல்லது அறிபுனை என்பர். அமெரிக்கன் ஹெரிடேஜ் ஆங்கில மொழி அகராதி, அறிவியல் புனைவுகளை “அறிவியல் முன்னேற்றம் மற்றும் அறிவியல் சித்தாந்தங்களை தன் கருவில் ஒரு பாகமாகவோ, கதை கருவில் பின்புலமாகவோ கொண்ட புனைவு வருங்கால அறிவியல் சாத்தியக்கூறுகளை உள்ளடக்கியது”[3] என கூறுகிறது. அந்த வகையில் அண்டனூர் சுரா, தன் சிறுகதைகளில் எதிர்காலத்தில் அறிவியல் வளர்ச்சியால் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை பற்றி கூறியுள்ளார்.

**அண்டனூர் சுராவின் சிறுகதைகளி அறிவியல் செய்திகள்**

“அறிவியல் ஆக்கங்கள் கற்பனையான கதை களத்தில் நடக்கக் கூடியதாக இயற்கைக்கு மீறியதாக அல்லாமல் இருக்கும். எதிர்காலத்தை பின்புலமாக கொண்டதாக அதிக முன்னேற்றம் அடைந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதாக விண்வெளி பயணம் வேற்றுகிரகவாசிகள் மனித ரோபோக்கள் வேலை செய்தல் போன்ற இயல்பு கடந்த நிகழ்வுகள் நடைபெறுவதாக அறிவியல் சிறுகதைகள் அமையும்”[4]. அறிவியல் கண்டுபிடிப்புகளின் பின் விளைவுகளை ஆராய்வது அறிவியல் புனைவுகளில் முக்கியமான மையக்கருத்தாக உள்ளது. இதன் மூலம் அறிவியல் புனைவானது சிந்தனைகளின் இலக்கியம் என்றும் கூறப்படுகிறது.

**அறிவியல் வளர்ச்சியில் இயந்திர மனிதன்**

இன்றைய சூழலில் அறிவியல் வளர்ச்சி வெகுவாக வளர்ச்சி அடைந்துள்ளது. தொலைபேசி இணையம் மின்னஞ்சல் போன்றவற்றால் உலகை கைக்குள் அடக்கி விடலாம், என்பது தெளிவாகிறது. அண்டலூர் சுரா, ‘பூங்கோதைக்கும் கற்பு’ உண்டு என்ற சிறுகதையில், எதிர்காலத்தில் இயந்திர மனிதனை வீட்டின் அன்றாட பணிகளை செய்வதற்கு மக்கள் பயன்படுத்துவர் என்பதை புனைவு இலக்கியமாக கூறியுள்ளார். “நான் ஆப்பிள் 2+ நிறுவனர் நீண்ட கால வாழ்க்கையாளர் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு வருட கால ஒப்பந்தத்தின் கீழ் பூங்கோதை என்கிற செவிலியை 10 லட்சம் ரூபாய் முன்பணம் செலுத்தி பணி பெண்ணாக வீட்டில் அமர்த்திக் கொண்டேன்”[5]. இயந்திர மனிதர்கள் அனைவருக்கும் அவர்களுடைய எஜமானர்கள் இடம் கட்டளைகளை நிறைவேற்றும் விதமாக அனைத்து செயல்களையும் உள்ளீடு செய்து பொருத்தி இருப்பர்.

“பூங்கோதை உலக தரச்சான்று பெற்ற பெண் ரோபோ. தமிழ் கலாச்சார பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இயந்திரம்”[6]. வீடு வாசலை அத்தனை சுத்தமாக வைத்திருந்தாள். வீட்டிற்குள் ஒரு கரப்பான் பூச்சி, எரும்பு, எலி, கரையான் எதையும் அவள் அனுமதித்தது இல்லை. கையுறை அணிந்து கொண்டே சமைத்தாள்[7].

பூங்கோதைக்கும் கற்பூண்டு என்னும் சிறுகதையில் இயந்திர மனிதராக இருந்தாலும் அது பெண் ரோபோ ஆகும். அதனை வீட்டின் வேலைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற மென்பொருளை பொருத்தியுள்ளனர். இயந்திர மனிதரை தவறாக பார்ப்பதோ அல்லது தொடுவதையோ செய்தால் அது தனது செயல்பாட்டை நிறுத்திக் கொள்ளும் என்பதை 2+ நிறுவனம்

ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ளது. ஆகையால், வாடிக்கையாளர் சர்வதேச நீதிமன்றத்தில் அவர் சார்பாக வழக்கு போட்டால் இயந்திர மனிதருக்கும் வழக்கு போடும் உரிமை உள்ளது என்பதை இச்சிறுகதை உணர்த்துகின்றது.

பூங்கோதை தன் அன்றாட பணியை சட்டென நிறுத்திக் கொள்ள இரண்டு வாய்ப்புகள் உண்டு அந்த இரண்டு வாய்ப்புகளையும் நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன் தூங்குவதையின் அந்தரங்க உறுப்புகளை உங்களது கண் கூர்ந்து கவனிக்கும் வேலையை செய்திருந்தாலும், அவரது ஆடையை கலைக்கும் முயற்சியில் இறங்கி இருந்தாலோ பூங்கோதை மெல்ல தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டிருப்பாள். அப்படியாக நிறுத்துகையில் ஆப்பிள் 2+ நிறுவனத்திற்கு தகவல் கொடுத்த பிறகு இயக்கத்தை நிறுத்தி இருப்பாள்[8].

**கல்வியை இனிமையாக்கிய அறிவியல் செய்திகள்**

அறிவியலும் தொழில்நுட்பமும் இன்று ஒரு வளர்ச்சி கருவி பொருளாதார சமுதாய வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் பயன்படும் ஒன்றாக பயன்படுத்த வேண்டிய ஒன்றாக அது பரிணாமம் பெற்றிருக்கிறது அறிவியல் தொழில்நுட்பத்தை வளர்ச்சிக்கு பயன்படுத்தும் தகுதியை ஒரு சமுதாயத்திற்கு தருவதே கல்வி ஆகும்[9].

அத்தகைய கல்வியில் அறிவியல் பாடங்களை இனிமையாகவும் எளிதில் விளங்கும் படியாக ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்கின்றனர். அதனை கண்டனூர் சுறா நியூட்டனின் இன்னொரு வகுப்பறை என்ற சிறுகதையில் ஆசிரியர் பயிற்சிக்கு வரும் எம் வடிவேல் ராஜன் என்ற ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவியல் பாடங்களை இயல்பாகவும் எளிமையாகவும் கற்றுத் தருகின்றார் என்பதை கூறியுள்ளார்.

நாங்கள் எழுப்பிய இரச்சலை அவர் மீயொளி என்றார். உயரமான மாணவர்களை பிரபோஸ் ஏவுகணை என்றும், பிஎஸ்எல்வி ராக்கெட் என்றும் அறிவியல் பெயர்களை வைத்து அழைத்தார்[10]. வடிவேல் ராஜன் மாணவர்களுக்கு அறிவியல் மூலக்கூறு வாய்ப்பாடுகளை அவர்களின் மனதில் எளிதாக நிலையில் வைக்க நமது வாழ்வியலை அதனுடன் ஒப்பிட்டு கற்பித்தார்.

நடப்பு நிகழ்வுகளாக வாழ்க்கையில் நடப்பனவற்றை அறிவியலுடன் ஒப்புமைப்படுத்தி வேதியியல் ஆசிரியரான வடிவேல்ராஜன் மாணவர்க்ளிடம் அறிவியல் சார்ந்த கல்வியை ஊக்கப்படுத்தினார். இதனால், எதிர்காலத்தில் பல அறிவியல் சாதனங்களை கண்டறியும் மாணவர்களை உருவாகும் முயற்சியில் இருந்தார்.

**முடிவுரை**

அறிவியல் வளர்ச்சி தொன்றுத்தொட்டே தமிழ் இலக்கியங்களில் காலங்காலமாக வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இன்றைய படைப்பாளர்களும், தங்களுடைய கவிதை, நாவல், சிறுகதை ஆகியவற்றில் அறிவியல் வளர்ச்சி, அது ஏற்படுத்தும் தாக்கம் அவற்றால் விளையும் வீழ்ச்சி ஆகியவற்றை படைத்துக் கொண்டே தான் இருக்கின்றார்.

**தொகுப்புரை**

1 பழந்தமிழ் நூல்களில் அறிவியல் சார்ந்த செய்திகளை பற்றி அறிய முடிகின்றது..

2 .இக்கால இலக்கியங்களான கவிதை நாவல், சிறுகதை போன்ற படைப்புகளிலும் அறிவியல் கண்டுப்பிடிப்புகளை புனைவு கதைகளாக படைக்கப்படுவதை அறிய முடிகின்றது..

3.அறிவியலின் வளர்ச்சியால் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிய முடிகின்றது.

4.சிறுகதைகள் அறிவியல் கண்டுப்பிடிப்புகளின் ஆக்கத்தையும் தாக்கத்தையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதை அறிய முடிகின்றது..

5.அறிவியல் கண்டுப்பிடிப்புகள் கல்வியை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுச் செல்வதை அறிய முடிகின்றது..

**சான்றெண் விளக்கம்**

1. புலவர் அ.மாணிக்கம் சங்க இலக்கியம் தொகுப்பு அகநானூறு தொகுதி-2 ப-174-175, பா.எண்-163.
2. புலவர் அ.மாணிக்கம் சங்க இலக்கியம் தொகுப்பு பதிற்றுப்பத்து தொகுதி-5 ப-510, பா.எண்- 74
3. அரவிந்தன் நீலகண்டன், அறிவியல் புனைவுகள்- ஒர் எளிய அறிமுக வரலாறு .திண்ணை இணைய வார இதழ்.
4. மேலது
5. அண்டனூர் சுராவின் தடுக்கை சிறுகதைத் தொகுப்பு. ப - 120
6. மேலது ப-126
7. மேலது ப-123
8. மேலது ப-127
9. வா. செ.குழந்தைசாமி அறிவியல் தமிழ் ப - 52
10. அண்டனூர் சுராவின் ஒரு நாடோடி கலைஞன் மீதான விசாரணை சிறுகதைத் தொகுப்பு. ப - 151.

**துணை நூற் பட்டியல்;**


| | | |
|---|---|---|
| 1 | அண்டனூர் சுரா | ஒரு நாடோடி கலைஞன் மீதான விசாரணை இருவாட்சி (இலக்கியத் துறைமுகம் )<br>41, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர்,<br>சென்னை-600011.அலைபேசி: 944640986<br>முதல் பதிப்பு-செப்டம்பர் – 2016 |
| 2 | அண்டனூர் சுரா | தடுக்கை<br>வெற்றி மொழி வெளியீட்டகம்,<br>எண்=9,இந்தியன் வங்கி கீழ்த்தளம்,<br>ஹோட்டல் டால்பீன் அருகில், சத்திரம் தெரு,<br>திண்டுக்கல்-624001.<br>அலைபேசி; 9715168794. பதிப்பு-2021 |
| 3 | குழந்தைசாமி.செ.வா | அறிவியல் தமிழ் பாரதி பதிப்பகம்,<br>126/108,உஸ்மான் சாலை, தியாகராய நகர்,<br>சென்னை-600017.முதல் பதிப்பு-டிசம்பர்-1985, |

திருத்திய ஆறாம் பதிப்பு-ஜுன்-2001.

4 சுந்தரம்.இராம. தமிழ் வளர்க்கும் அறிவியல்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41. B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர் சென்னை-600098.
முதல் பதிப்பு-ஜுலை -2009
மூன்றாம் பதிப்பு-டிசம்பர்-2017

5 மாணிக்கம்.அ.புலவர். சங்க இலக்கிய தொகுப்பு அகநானூறு தொகுதி-2
வர்த்தமான பதிப்பகம், 21-ராமகிருஷ்ணா தெரு,
தி.நகர்.சென்னை-17.

6 மாணிக்கம்.அ.புலவர் சங்க இலக்கிய தொகுப்பு பதிற்றுப்பத்து தொகுதி-5
வர்த்தமான பதிப்பகம், 21-ராமகிருஷ்ணா தெரு,
தி.நகர்.சென்னை-17.

**இணைய முகவரி.**

1. old.thinnai.com
2. ta.m.wikipedia.org
3. ta.m.wikipedia.org.
4. https://www.tamilvu.org